744

Reg. No. M. 1534.

R. C. Training
School Magazine,
Trichinopoly.

3 MAY 1932

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 22	ஏப்பிரல், மே 1932	மலர் 10 & 11

பத்திராதிபர் குறிப்புகள்

JC
ணூ211, N11PP
1932.22.10-11
182290.

பாத்திமாராய்ப் பயிலுவதற்கு வரும் மாண
நாள் குறைந்துகொண்டே வருகிறதாம்.
கிரேடைப் போதனுமுறைப் பாடசாலை
ஞ்சமாய் நிறுத்திவிடப்போகிறுர்களாம்.

இவர்களுக்குப் பதிலாய் ஹையர் கிரேடு மாணவர் ஜாஸ்தியாய்க் கிடைப்பதென்றால் உபாத்திமாரின் தொகையும் திறமையும் அதிகரிக்கும். இது ஆரம்பக்கல்வியைப் பரப்புவதற்கு அதிக அநுகூலமாய் முடியும்.

உதாரணமாக, நமது பாடசாலையில் ஹையர் கிரேடு பயிலுவதற்காகச் சென்ற வருஷம் அப்ளிகேஷன் செய்த கிறீஸ்துவ மாணவர்கள் 150 பேருக்கு அதிகம். இவர்களுக்குள் 40 பேருக்குமேல் சேர்க்கமுடியவில்லை; 100 பேருக்குமேல் வேண்டாமென்று தள்ளவேண்டியதாயிற்று. இவர்களுக்குப் பதிலாய் லோயர் கிரேடுக்கு அப்ளிகேஷன் செய்த கிறீஸ்துவ மாணவர்கள் 25 பேர் மாத்திரமே. லோவர் கிரேடுக்குப் பதிலாய் ஹையர் கிரேடு தெரிந்துகொண்டால் 25-க்குப் பதிலாய் 40 பேர் சேர்த்திருக்கலாம்.

சென்ற 10 வருஷங்களாய் நமது திருச்சினாப்பள்ளி மேற்றிராசனத்திலிருந்து நமது பாடசாலையில் சேர்க்கப்பட்ட லோவர் கிரேடு மாணவர்கள் சராசரி 20 இருக்கலாம். இவர்களுக்குப் பதிலாய் ஹையர் கிரேடு சேர்த்திருந்தால் இந்தத் தொகை 40-க்கு உயர்ந்திருக்கலாம். இந்தக் கணக்குகளெல்லாம் உத்தேசித்து உபாத்திமாரின் தொகையையும் திறமையையும் அதிகரிக்கும் பொருட்டு இந்த ஜூன் மாதம் முதல் நமது பாடசாலையில் லோவர் கிரேடுக்குப்பதிலாய் ஹையர் கிரேடில் 40 பேர் அடங்கிய புது வகுப்பு ஒன்று துவக்கத் தீர்மானித்திருக்கிறது.

* * *

இந்த வருஷம் போதனாமுறை பயிலப் புதிதாய்ச் சேர்க்கப்படும் மணவர்களுக்குச் சர்க்கார் உதவிச்சம்பளம் கொடுப்பரோவென்பதைப்பற்றி இன்னும் ஒரு முடிவும் வெளிப்படுத்தவில்லை. உதவிச்சம்பளம் இல்லாமலே எத்தனை பேர் போதனாமுறை பயிலும்படி முன்வருகிறார்கள் என்பதை அறியும்பொருட்டு சர்க்கார் இவ்வித காலதாமதம் பண்ணுகின்றனரோ?

* * *

இங்கிலண்டு தேசத்தில் கல்வி இலாகாச் செலவில் இவ்வருஷம் 60 லட்சம் பவுன் குறைத்திருக்கிறார்களாம். 1931-ம் வருஷம் மொத்தச் செலவு 58377598 பவுன் இவ்வருஷம் செலவு செய்ய உத்தேசித்திருப்பது 52006461 பவுன் மாத்திரமே. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு எடுக்கேஷன் போர்டார் கொடுக்கும் கிராண்ட் 5931000 பவுன் குறைத்து 38755000 பவுனுக்கியிருக்கிறார்

82290
சென்னை 600 008

களாம். ஆரம்பப்படிப்பு விஷயமாய் ஒவ்வொரு குழந்தைக்கும் சென்ற வருஷம் செய்த செலவு 267-ஷிலிங் 9-பென்ஸ்; இவ் வருஷமோ 251-ஷிலிங் 7-பென்ஸ்.—இஃதெல்லாம் நமது மாகாணத்தில் கல்வி விஷயமாய்ச் செய்யும் செலவோடும், இப்போது குறைத்திருக்கும் விகிதத்தோடும் ஒப்பிட்டுப்பார்த்தால் பிரயோசனமாயிருக்கும்.

***　　　***　　　***

நமது பாடசாலை துவக்கி 25 வருஷம் பூர்த்தியாகிவிட்டது. ஆகவே இவ்வருடம் நமது பாடசாலையின் வெள்ளி ஜூபிலி வருஷம். இந்த சந்தர்ப்பத்தைத் தகுந்த விதமாய்க் கொண்டாடுவதற்கு நமது பழைய மாணவர் யோசனை கொடுக்கும்படி கோருகிறோம்.

***　　　***　　　***

இந்தப் பாடசாலைக் கட்டிடங்கள் கட்டத் துவக்கினபோது அவைகளை மேற்பார்த்து நடத்தி இங்கு வந்து பயின்ற உபாத்திமார் சகலருக்கும் அறிமுகமாகி அவர்கள் மத்தியில் ஜீவித்துவந்த சங்கைக்குரிய ஜோசேப் பிரதரவர்கள் அர்ச். சூசையப்பர் மாதம் கடைசி நாளில் பரலோக பிராப்தியானார்கள். அவர்கள் சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக!

JL
211, N11pp
22.10.11

புத்தகசாலை இயக்கமும் தேச முன்னேற்றமும்.

பிரிடிஷ் ஏகாதிபத்யத்திற்குட்பட்ட நாடுகளுள் நமது இந்தியா தேசத்தைப்போல் கல்வியில் பின்னடைந்திருப்பது மற்றொன்றில்லை. நமது நாட்டில் கிராமங்கள் செறிந்துள்ளன. கிராம ஜனத்தொகையே இந்நாட்டில் மிகுதி. கல்விஅறிவின்மை என்னும் இருள் கிராமங்களில் சூழ்ந்திருக்கின்றது. இந்த விஷயம் அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் இந்த இருளை நீக்குவதெங்ஙனம் என்ற ப்ரச்னை அடிக்கடி தோன்றி விவாதிக்கப்படுவதுண்டு. சட்டசபைகளில் கட்டாயக் கல்வி விஷயமாய் மசோதாக்கள், அல்லது ஆரம்பக் கல்வி திருத்தச்சட்டங்கள் முதலியவை இயக்கப்பட்டும், ஆக்கப்பட்டும் வருகின்றன. எனினும், பொது மக்களின் கல்வியறிவு அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை.

அநேகருக்குக் கல்வியின்பேரில் ஆவல் உண்டாவதில்லை. இது மெய்யாய் இருக்கலாம் அது அவர்களுடைய குறையாகலாம்.

182290

ஆயினும், அவர்கள்மாட்டு அந்த ஆவலைத் தூண்ட வசதிகளை அமைத்துவைக்காவிடில் அது யாருடைய குற்றம்? பாடசாலைகளின் தொகை வருஷாவருஷம் அதிகரித்துக்கொண்டிருப்பதாகக் கணக்கெடுத்தால் போதுமா? படிக்கும் மாணுக்கர்களிடை சதா படிக்கும் வழக்கம் படியும்படி செய்யவேண்டும். பாடசாலைப் படிப்பை முடித்தவர்களும், அதை முடிக்க இயலாதவர்களும் தொடர்ந்து படிப்பதற்குச் சாத்தியமாகுமாறு, வாசகசாலைகள் நிறுவப்படுதல் வேண்டும்.

வறுமையின் காரணத்தாலோ, மற்ற இடையூறுகளாலோ அநேகருடைய படிப்பு அரைகுறையாக முடிந்துவிடுகிறது. படித்த அற்ப சொற்பப் படிப்பும் அப்பியாசக்குறைவால் மறந்துபோக நேரிடுகிறது. எனவே புத்தகசாலைகள் அனைவர்க்கும் உபயோகமாகும்படி அமைத்தல் வேண்டும். பாடசாலைகளின் தொகையைப் பெருக்குவதற்காக செலவழிக்கப்படும் பணம் புத்தகசாலைகளைக் கிராமங்கள்தோறும் நிறுவ, உபயோகிக்கப்படலாம். இதனுல் அவர்களுடைய அறிவு பெருகுதல் ஆகும்.

பொதுவாய்க் கிராமவாசிகள் தங்கள் ஓய்வு நேரங்களை வீண் பேச்சுகளிலும் சண்டை சச்சரவுகளிலும் போக்கிவருகிருர்கள். அந்த நேரம் கிராம வாசகசாலையில் செலவாகுமானுல் அவர்களுடைய அறிவின்மை நாளுக்குநாள் நீங்கிப்போவதைக் காணலாம். ஆனுல், கிராம வாசகசாலை நிருமிக்கப்பட்டாலும், அதன் பயனை அவர்கள் எய்தும் வண்ணம் எங்ஙனம் செய்வது? எழுத்து வாசனையறியாத கிராமவாசிகட்கு அதன் சுவையை அவர்கள் நுகரும் வண்ணம் ஆக்குபவர் யார்?

ஆரம்ப ஆசிரியரது கடமை மிகப்பெரிது. ஆரம்ப ஆசிரியர் கிராம வாசகசாலையின் அத்தியக்ஷகர். கல்வியின்மேல் ஆசையைத் தூண்ட அவரே வல்லவர். படிக்கும் மாணுக்கர்கள், படிக்க இயலாத இளைஞர், வயது சென்றவர்கள், ஏனையோர் அனைவரிடத்தும் வாசகசாலையின் சிறப்பை எடுத்துக்கூறி அதில் ஓய்வு நேரங்களில் கல்வி புகட்டப்படுமென்றும் புத்தகங்கள் வழங்கப்படுமென்றும் எடுத்தோதவேண்டும். கொஞ்சம் படிக்கத் தெரிந்தவர்கள் ஒன்றுமே அறியாதவர்களுக்குப் போதிக்கலாம். தாங்களும் மேலும் மேலும் படிக்கலாம். ஆசிரியர் இதைப்போன்ற ஏற்பாடுகளை அல்லது திட்டங்களை யமைக்க அதிகாரம் பெற்றவராகின்ருர்.

கிராம வாசகசாலைக்குரிய புத்தகங்களைத் தெரிந்து அவற்றை ஒழுங்காய் அமைத்தல் முக்கியமாகும். நீதிக்கதைகள், சுகாதார

நூல்கள், தொழிலபிவிருத்திக்கான புத்தகங்கள், வைதீக கிரந்தங்கள் முதலிய பற்பல நூல்களையும், ஏனை இலக்கண இலக்கிய நூல்களையும், பௌதிக, ஜனசமூக நூல்களையும், பூகோளம், சிற்பம் முதலிய சாஸ்திரப் புத்தகங்களையும், தேச சரித்திரங்களையும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். கிராமத்தாரின் தேவைக்கும் உதவிக்கும் தக்கவாறு அவை இருத்தல் தகுதியாகும். சாமானியமாய் எளிய, தெள்ளிய நடையில் எழுதப்பட்ட நூல்களே எவ்வாற்றானும் சிறந்தவையாகும். கிராமத்தவர்களின் சௌகரியங்களுக்குத் தக்காப்போல் வாசிக்கும் நேரம் குறித்து, அவர்களுடைய இஷ்டம்போல் நூல்களைப் படிக்க அல்லது படிக்கத் தெரிந்துகொள்ள வசதிகளை அமைத்தல் வேண்டும்.

ஆனால், இவ்விதப் புத்தகசாலையை நிறுவ, வசதிகளை அமைக்கக் கடமைப்பட்டவர்கள் யாவர்? கல்வியின் பயனை எய்த அவாவும் அனைவரும் இக்காரியத்தில் கடமைப்பாடுடையவர்களே! விசேஷமாய் கிராம ஆசிரியர் இந்த வேலையைச் செய்ய அல்லது இந்தச்சமூகத் தொண்டுபுரிய முன்வரல் வேண்டும்! செல்வாக்குள்ளவர்களும் தனவந்தர்களும் ஆசிரியருக்குத் துணை புரிதல் வேண்டும். தேசாபிமானிகள், கிராம புனரோத்தாரணத்திற்காகப் பாடுபடுபவர்கள் ஜனப்பிரதிநிதிகளாகும். சட்டசபை அங்கத்தவர்கள் முதலியோர் இந்தப் புத்தகசாலை இயக்கத்தைப் பரவச்செய்து, துரைத்தனத்தாரிடம் திரவிய சகாயம் பெற்றுத் தரல் வேண்டும். துரைத்தனத்தார் பொதுமக்களின் கல்வியின் பொருட்டு வாசகசாலை ஏற்படுத்த எந்தெந்த ஸ்தாபனம் உழைத்து வருமோ அததற்குப் பணவுதவி புரியத் தயாராய் இருத்தல் தகுதியாகும். எனவே கிராம முன்னேற்றத்தைப்பற்றிக் கவலை கொண்டுள்ளவரனைவரும் உருவான இந்தப் புத்தகசாலை இயக்கத்தை வலுப்படுத்துவார்களானால் அவர்கள் மெய்யாகவே, அதன் முன்னேற்றத்திற்கு முதலாளியாய் நின்றவராவர் என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை.

T. S. Ganapathi Aiyar.

பூகோளம் கற்பிக்கும் முறை

(123-ம் பக்கம் தொடர்ச்சி)

III. ஆரம்பப் பாடசாலைகளில் பூகோளம் கற்பிக்க வேண்டிய நோக்கமும் அளவும்

இரண்டாவது அத்தியாயத்தில் பூகோள சாஸ்திரம் படிப்பதனால் ஏற்படும் நன்மைகளைத் தெரிந்துகொண்டோம். இப்போது அப்பாடம் ஆரம்பப் பாடசாலைகளில் எந்த நோக்கத்துடன் எந்த அளவில் கற்பிக்கவேண்டுமென்று ஆராய்வோம்.

உலகில் மனிதராகப் பிறந்த யாருக்கும் பூகோள அறிவு அவசியமானது. தன்னுடைய சுற்றுப்புறமும், தனக்கு வேண்டிய ஆகார வகையும், அவை அகப்படும் இடமும், தன்னிடத்துக்கு வந்து சேரும் மாதிரியும் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டியதவசியம். அதுபோலவே தனக்கு எப்பொருள் ஆடையாக உபயோகப்படுகிறது, எவ்விதம் அது தயாராகிறது, எங்கு தயாராகி எவ்விதம் கொண்டுவரப்படுகிறது என்று தெரியவேண்டும். தன்னிருப்பிடத்தில் என்னென்ன விளைபொருள்கள் விளைகின்றன ஏன் அவ்விதம் விளைகின்றனவென்றும், உடை ஆகாரம் தவிர மற்றும் தனக்குத் தேவையான மரச் சாமான், கண்ணாடிச் சாமான், குடை, பேனா, காகிதம் இவைகள்போன்ற பொருள்கள் எதிலிருந்து தயாரித்து எங்கிருந்து எவ்விதம் வந்து சேருகின்றனவென்னும் விஷயங்களையும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். அதுபோலவே, கால மாறுதல்கள், கோடை மாரி கால வேறுபாடுகள், இரவு பகல் நேர மாறுபாடுகள், சூரியனின் சாய்வு, மழை காற்று இவைகள் ஏற்படும் மாதிரியும், கூடுமானால் காரணமும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். மேற்கூறிய விஷயங்களை ஒவ்வொரு மாணவனும் தான் அறிந்துகொள்ளுவதுமல்லாமல் தெரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லும் வல்லமையுள்ளவனுயுமிருக்கவேண்டும். உதாரணமாக புயல்காற்று அடிப்பதை எடுத்துக்கொள்வோம். பூகோள சாஸ்திர அறிவில்லாத ஒருவனுக்கு அதன் காரணமும், தன்மையும் தெரிவதில்லை. ஆனால் பூகோள அறிவுள்ளவனுக்கு அவ்வித காற்று, காற்றழுத்த வேறுபாட்டினால் (difference in the pressure of air) ஏற்பட்டதென்றும் காற்றின் கனம் சரியாய்விட்டால் புயல் நின்றுவிடுமென்றும் நன்கு விளங்கும். ஆதலின் சாதாரணமாகத் தினப்படி நடக்கும் இயற்கை உற்பவங்களான காற்று, மழை, உஷ்ணம் முதலிய விஷயங்கள் காரண காரிய சம்பந்தமாக யாருக்கும் தெரிந்திருப்பது

மெத்த அவசியம். ஆதலின் சிறு பிராய முதற்கொண்டே பிள்ளைகளை இயற்கை அற்புதங்களை நன்கு கவனிக்கும்படி தூண்டு தல் வேண்டும்.

மேலும் பூகோளம் ஆரம்ப திசைகளில் இயற்கைப் பொருட் பாட மூலமாகவே கற்பிக்கப்படவேண்டும். பிள்ளைகள் தங்கள் சுற்றுப்புறத்தில் எவ்விதப் பயிர் வளர்கிறதென்றும், எவ் விதம் நிலம் அப்பயிருக்கு ஏற்றதென்றும், எவ்விதம் அப்பயிர் வளர்கிறதென்றும், எக்காலத்தில் பயிர் செய்யப்படுகிறதென்றும் அறியவேண்டும். ஆகவே, நிலத்தின் தன்மை, சீதோஷ்ண ஸ்திதி, மழை, தாவரம் முதலியவற்றை ஒருவாறுகத் தெரிந்து கொள்ள இடமேற்படுகிறது. நிலத்தின் தன்மையைக் கவனிக் கும்போது அது மேட்டு நிலமா, பாறையா, சமவெளியாவென் றும், சாரமுள்ள நிலமா அல்லது சாரமில்லாததாவென்றும், ஜல வசதி எவ்விதம் ஏற்பட்டுள்ளதென்றும் தெரிந்துகொள்ளவேண்டி யிருக்கிறது. ஜனங்களின் ஆகாரம், நடையுடைபாவனை முதலி யவை இடத்திற்குத் தகுந்தாற்போல் எவ்விதம் மாறுபடுகின்றன வென்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆதலின் கீழ்க்கண்ட நோக்கத்துடன் ஆரம்பப் பாடசாலை களில் பூகோளம் கற்பிக்கப்படவேண்டும்:—

1. பிள்ளைகளைத் தாமாகவே தமக்கு அக்கம்பக்கம் சுற்றுப் புறம் இவற்றில் நடக்கும் விஷயங்களை ஆவலுடனும், அக்கரை யுடனும் கவனித்து அவற்றின் காரணத்தை அறிந்துகொள்ளச் செய்வது.

2. பூகோள சம்மந்தமாய் நடக்கும் ஒவ்வொரு காரியத்தின் காரணத்தையும் தெரிந்துகொள்ளச் செய்வது.

3. பிள்ளைகளின் உற்று நோக்கும் சக்தி, பாவனு சக்தி முத லியவற்றை விருத்தி செய்வது.

4. சுதேசாபிமானத்தை உண்டுபண்ணுவதுமல்லாமல், உல கத்திலுள்ள ஜனங்கள் யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் களென்றும், அவர்கள் ஒருவருக்கொருவர் சிநேகப் பான்மையா யும் அந்நியோன்யமாயும் சண்டையின்றி வாழ முயலவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டுவது.

5. பல தேசங்களையும், விஷயங்களையும் அறிந்துகொள்வ தால் பொதுவாக அறிவு விருத்தியாவதல்லாமல் தேச சரித்திரம், ராஜீய நூல், செல்வ விருத்தி நூல் முதலியவற்றைக் கற்பிப்ப தற்கு உதவியாகவிருத்தல்.

6. பிந்திய காலத்தில் தாங்கள் அறிந்துகொண்ட பூகோள அறிவைக்கொண்டு அவ்வப்போது பிரசுரிக்கப்படும் பிரயாணங்களின் குறிப்புகளும், தேச படம், கஜட்டியர்கள் முதலியவற்றை நன்கு உபயோகிக்கவும் அவற்றிலும் வர்த்தமானப் பத்திரிகைகளிலும் வெளிவரும் பலவூர்களின் செய்திகளை நன்கு அறிந்துகொள்ளவும் உதவியாகவிருக்கச் செய்தல்.

(தொடரும்)

M. Krishnamurthi Aiyar, B.A., L.T.,
Science and Geography, Assistant,
R. C. Bg. & Training School,
Trichinopoly.

புலவர் பெருமிதம்

(91-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற புலவர் இளங் கண்டீரக் கோவை யடைந்தனர். இளங் கண்டீரக் கோவென்பான் கண்டீரக்கோவின் இளவலாவன். நங்கவிவாணர் சென்ற ஞான்று, இளங் கண்டீரக்கோ இளவிச்சிக்கோவுடன் ஒருங்கிருந்து இன்னிய மியம்பச் சங்க முழங்கப் பஃறுளைக் கருவிகள் பாங்குடன் ஒலிப்ப, பெரும்பாணர் புகழ் பாட நறும் புலவர் நலமியம்ப மருமலர் மாலை மார்பகங்கு மழப் பல் பெருஞ் சுற்றம் பாங்கமரக் கொலு வீற்றிருந்தனன். இவ்வகை நலத்துடன் செவ்விதினிருக்குங் கோக்கண்ட நாப்புலவர் இரும்பேருவகை பொலிந்துதோன்ற விரைந்துசென்று முதற்கணிருந்த இளவிச்சிக்கோவை மதித்துத்தழுவாது அப்பாற் சென்று வளங்கொண்ட பூவிற்கோர் திலகமான இளங்கண்டீரக் கோவைச் சேய்கண்ட தாய்போன்று, ஆர்வம் பொங்க மார்புறத் தழுவினர்.

புலவர் செயலைப் பொற்புற வுணர்ந்த வளவனான இளவிச்சிக்கோ இரும்பூதுற்றுப் புலவர் பெருந்தகையீர்! யானுமக்கியாது தீங்கிழைத்தேன். யான் முன்னிருப்பவும் என்னைத் தழுவாது சென்று இளங்கண்டீரக்கோவைப் புல்லக் காரணமென்னென வினவினன்.

வினவியதுணர்ந்த புலவர் தழுவப்பட்டோர் அருங்குணந் தோன்றவும் தழுவிய தமது பெருமிதந் தோன்றவும் கூறத் தொடங்கி, உயர்ந்தோய்! பண்டும் பண்டும் பாடுவார் விரும்பும்

படியாக வானளாவிய உச்சியையுடைய சிறந்த மலைப் பக்கத்துத் தங்கணவர் சேட் சென்றுழிப்புல்லிய தலையையுடைய மெல்லிய பிடியை யாபரணத்தானலங்கரித்துப் பெண்டிரும் பரிசிலளிக்குந் தண்டாத சிறப்புடை மறபிற் கண்டீரக்கோவாதலின் யான் பெரிதுந் தழுவினேன். நீயுந் தழுவுதற்குப் பொருந்தினையாயினும் விளங்கு மொழியுரைக்கு நலங்கெழு புலவர்க் கடைத்த கதவு காரணமாக, எம்மனோர் நும் மலை பாடாராயினர். அதனால் யானு முயங்கிற்றிலேன் என்றுரைத்துத் தமது பெருமித நிறுவினர்.

பின்னர் இளங்கண்டீரக்கோ வளம் பல நல்கச் சுற்றஞ் சூழச் சென்று வாழ்ந்தனரென்ப.

கழைதின்யானையார்

இனிக் கழைதின்யானையாரைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

கழைதின்யானையாரென்பவரைப்பற்றிச் சரித்திர வாயிலாக அவர் எவ்வூரினர் எவ்வகுப்பினர் எக்காலத்தினர் என்று யாண்டுங் குறிக்கப்பட்டின்று. என்றாலும் புறநானூற்றில் 204-வது பாட்டைக்கொண்டு இவர் திறங் கணித்தறியப்படுகின்றது.

நம்புலவர் கடைவள்ளலார் காலத்தவரென்பது மேற்பாட்டானேவலியுறும். அப்பாட்டைக்கொண்டே அவர் இன்மை தழுவப்பட்டாரென்பதும் போதரும். வறுமைப்பட்டாரேனும் சிறுமைக் குணமுடையாரல்லர். அன்றியும் அக்காலத்துக் கவிஞர் புரவலர்பாற் சென்று அவர்புகழ்கூறித் தம்புகழ் நிறுவுதலையே பெறுநோக்கமாகக் கொண்டவர்களென்பது பழைய நூல்களால் நன்குவிளங்கும். இவ்விரு காரணமும்பற்றிப் பாவலர் கற்றுச் சொல்லிகள் சுற்றுற ஆறு கடந்து வீறு மிகுந்து தேறிய செம்மைச் செங்குணச் செல்வனாகிய வல்வில் ஓரியையடைந்தனர்.

வல்வில்லோரியை ஓரியென்று கூறுதலுமுண்டு. ஓரியென்று கூறப்படுவான் பாரி, காரி, ஓரி, ஆய், நள்ளி, அதிகமான், பேகன் என்ற கடையெழு வள்ளலாரி லொருவனாவன். வள்ளலென்போன் வரையாது கொடுப்போன் என்பதனால் இவன் கொடைச் சிறப்புங் கொடுத்தற்கு வேண்டும் பொருளமைதியும் பிறவும் நன்கு புலனாகின்றது. இத்துணைச் சிறப்புடைய வள்ளல் பெருஞ் சிறப்புற்ற காலமே நம்புலவர் சென்ற காலமுமாகும்.

மேற்கூறியாங்கு சிறப்புறச்சென்ற நாவலர் அறனிரம்பிய அருளுடை யந்தணர்க்கேனும் பெறலரும் திருப்பெற்றபின் சிந்

தனே பிறிதாம். இன்னேனம்மை யவமதித்தபின்னும் வருந்துதல் தகுதியன்று எனவெண்ணியவற் கறிவுறுத்துவான் விரும்பிக்கால வியல்புபற்றி ஓலேத்துக்குவாயிலானறிவுறுத்தவும். அவன் சிறிது காலந் தாழ்ந்தனன். அதுகண்ட புலவர் பெருந்தகை காவலனே நோக்கி :

"ஈயென விரத்தலிழிந்தன் றதனெதிர்
ஈயேனென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்றதனெதிர்
கொள்ளேனென்ற லதனினு முயர்ந்தன்று"

அதனுல் தண்ணீரை விரும்பினுர், கடனீரை யுண்ணுர், அருகிலிருந்தும். தேடிச்சென்றும் நன்னீருண்பர்; அதனுல் யாம் விருப்பின்றித் தாழ்த்திதலே வேண்டேம் என்று புலந்து செல்வான் துணிந்தனர். நாவலர் புலந்து செல்லத் துணிந்தது கண்ட காவலன் விரைந்து சென்று தாழ்ந்து பணிந்து பொன்பலவீந்தனன். புலவரும் நீர்கொண்ட வெம்மை தணிந்தாங்குச் சினந்தணிந்து வாழ்த்திச்சென்றனர்.

முடிவு

இதுகாறுங் கூறியவாற்ருல் அருந் தமிழ்மொழியைத் திருந்துறப் பயின்ருேர் பலர் வறுமையால் வாடினரென்பதும் அவர் எல்லோரிடத்திலும் ஏற்பாரல்லர் என்பதும், பெருந்திருவுடையாரும் நறுந்தகவுடையாருமாயினுரிடத்தே செல்வரென்பதும் அவரும் குறிப்பறிந்தீயினல்லது, அவரை மதியாரென்பதும் தெற்றென விளங்கும்.

பயன்

இவ்வாராய்ச்சியாற் பயனென்னேயெனின் திருந்துறு கல்வியைச் செவ்விதிற்பயின்று தளர்ச்சியகன்று விழுப்பமெய்திப்பீடுடைய வீடடையவேண்டுமென்பதாம்.

மா. அ. சுயம்பிரகாசவுடையார்,
தமிழாசிரியர்,
உரோமன் கத்தோலிக்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
சண்டோன்மெண்டு, திருச்சி.

சந்தாதார் பக்கம்

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம் இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

பாடக் குறிப்பு

III Class] [நேரம்: 35 நிமிஷம்

பாடம்: கணக்கு.—பாகம்: வகுத்தல்.

நோக்கம். ஒரு ஸ்தான எண்ணைக்கொண்டு இரண்டு ஸ்தான எண்ணை வகுத்தல்.

உபகரணம். 10 அட்டைகள் சேர்ந்த கட்டுகளும்; தனிக் குச்சிகளும் (அட்டைகளும்).

பீடிகை. பிள்ளைகளை உற்சாகப்படுத்தியபின், 15 முருக்குகளை 5 பேருக்குச் சமபாகமாகப் பங்கிட்டால் ஒருவனுக்கு எத்தனை முருக்குகள்? 28 கொய்யாப் பழங்களை 7 பேருக்குச் சரிபாகமாகப் பகிர்ந்து கொடுத்தால் ஒருவனுக்கு எத்தனை கொய்யாப் பழங்கள்? 42 புஸ்தகங்களை 6 பேருக்குப் பகிர்ந்து கொடுத்தால் ஒருவனுக்கு எத்தனை புஸ்தகங்கள்? இவைபோன்ற பல கணக்குகள் போட்டபின் பாடத்தைத் துவக்கவேண்டும்.

விஷயம்	முறை
68 ஆப்பிள் பழங்களை 4 பேருக்குப் பகிர்ந்து கொடுத்தால் ஒருவனுக்கு எத்தனை ஆப்பிள் பழங்கள் கிடைக்கும்?	விஷயத்தில் கண்ட கணக்கை பிள்ளைகளை வாசிக்கச்செய்யவேண்டும். பின் 5 பையன்களைக் கூப்பிட்டு 68-ல் எத்தனை பத்துக்கள் எத்தனை தனி ஒன்றுகளென்று பொதுவில் கேள்வி கேட்டு 6 பத்துக்கள் 8 தனி ஒன்றுகளென்ற விடையை வரவழைத்தபின் 10 அட்டைகள் கொண்ட 6 கட்டுகளையும் 8 தனி

விஷயம்	முறை
4 பையன்கள் 68 ஆரஞ்சிப் பழங்கள்.	அட்டைகளையும் 5 பேரில் ஒருவனை எடுக்கச்செய்து, ஏனைய 4 பேர்களையும் ஒரு வரிசையில் நிறுத்தி ஒவ்வொருவனுக்கும் முதலில் ஒரு கட்டைக் கொடுக்கச்செய்து பின் மீதி எத்தனை கட்டுக்களிருக்கின்றன என, கொடுத்த பையனைக் கேட்டு (68—40) 28 அதாவது 2 கட்டுகளும், 8 தனி ஒன்றுகளுமென்ற விடையை வரவழைத்து, இனி மீதியான 2 கட்டுக்களை என்ன செய்யவேண்டும் எல்லோருக்கும் ஒவ்வொரு கட்டாகக் கொடுக்கமுடியுமா? பின் என்ன செய்யவேண்டும்? எனக் கேட்டு 2 கட்டுகளையும் அவிழ்த்து 8 தனி அட்டைகளோடு சேர்த்துக் கூட்ட வேண்டும் என வரவழைக்கவேண்டும். (20+8=28)
ப. ஒ. 1 7 4 | 6 | 8 4 | 2 | 8 2 | 8	மிகுந்திருக்கும் 28 அட்டைகளையும் 4 பேருக்குப் பகிர்ந்து கொடுக்கும்படி சொல்லி 28-ல் எத்தனை 4 இருக்கிறதென்று கேட்டு 7 என்ற விடையை வரவழைத்து அப்பொழுது 28 அட்டைகளையும் 4 பேருக்குப் பகிர்ந்தால் ஒருவனுக்கு எத்தனை அட்டைகள் எனக் கேட்டு, 7 அட்டைகளென பதிலை வரவழைக்க வேண்டும்.
17 ஆப்பிள் பழங்கள்.	முதலில் ஒவ்வொருவருக்கும் எத்தனை கட்டுக் கொடுத்தாய்? பின் தனித்தனி அட்டையாக எத்தனை கொடுத்தாயெனக் கேட்டு முதலில் 10 அட்டைகள்கொண்ட ஒரு கட்டும் பின் தனி அட்டைகளும் (10+7=17) 17 அட்டைகளென்று வரவழைக்கவேண்டும். சந்தேகப்படும்பொழுது ஒவ்வொருவனிடமும் கொடுத்த அட்டையை வாங்கி எண்ணிப்பார்க்கச் செய்து 17 என்ற விடையை வரவழைக்க வேண்டும்.

விஷயம்	முறை
க. ப. சு. 68 ÷ 4	6 பத்துக்களில் எத்தனை தடவை 4 அடங்கியிருக்கிறது எனக் கேட்டு ஒரு தடவை என பதிலை வாங்கி பத்தாவது ஸ்தானத்தில் 1-ஐ எழுதவேண்டுமென வும் மீதி 2 பத்துக்களை என்ன செய்ய வேண்டுமெனக் கேட்டு 2 பத்துக்களை ஒன்றுகளாக மாற்றி ஒன்று (மிகுந்திருக் கும்) அவைகளுடன் கூட்டச்செய்து இப் போது எத்தனை தனி ஒன்றுகளெனக் கேட்டு 28 என்ற பதிலை வரவழைத்து 28-ல் எத்தனை 4 இருக்கிறதெனக்கேட்டு 7 ஒன்றுகளென பதிலை வாங்கி ஆகவே (1 பத்து + 7 ஒன்றுகள்) ஒவ்வொருவனுக் கும் எத்தனை பழங்கள் கிடைக்குமென மறுபடியும் கேட்டு 17 பழங்கள் கிடைக் குமென்ற பதிலை வரவழைத்து இப்பேர்ப் பட்ட கணக்குகள் பிள்ளைகளின் மனதில் ஆழமாகப் பதியும்படி செய்யவேண்டும்.

	ப.	ஒ.
	1	7
4	6	8
	4	
	2	8
	2	8

பரிக்ஷை. 95 மிட்டாய்களை 5 பேருக் குச் சமபாகமாகப் பங்கிட்டால் ஒருவ னுக்கு எத்தனை மிட்டாய்கள் கிடைக் கும்?

A. Ignacymuthu Edmund,
Higher Grade,
R. C. T. S., Trichy.

கிண்டர்க்காட்டன் வகுப்புகளில் சிறுவர்களின் நற்பழக்கவழக்கங்கள்

தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்னும் முதுமொழிக் கிணங்க, சிறு பிள்ளைகள் தங்கள் சிறு பிராயத்தில் எவ்விதமாகப் பயிற்சிக்கப்படுகிறார்களோ அவ்விதமே சீவியகால முழுவதும் இருப்பார்கள். பழக்கவழக்கங்கள் திடீரென்று தோன்றிவிடுவ தில்லை. இவைகள், சிறுவர்கள் வளரவளர அவர்களோடு வளர்ந்துகொண்டேவரும். இவ்வண்ணம் சிறுபத்திலே பழகுகிற

நற்பழக்கவழக்கங்கள் மாறுவது அசாத்தியம். நன்கு துவக்கப் பட்ட காரியம் பாதி முடிந்துவிட்டதென்பதுபோல, இளமை யிலேயே நற்பழக்கவழக்கங்களைத் துவக்கினால் ஜீவியம் நல்ல ஜீவியமாகவே இருக்கும். ஜீவியம் எப்படியோ அப்படியே முடிவு மிருக்கும். ஆகவே கிண்டர்க்காட்டன் ஆசிரியர்களின் காதில், "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" "முறுக்கி வளர்க் காத மீசையும் அடித்து வளர்க்காத பிள்ளையும்," "பிரம்பு எடாத வன் தன் பிள்ளையைப் பகைக்கிறான்" என்னும் இம்முதுமொழி கள் விடாது ஒலித்துக்கொண்டிருக்கவேண்டும். சிறுபத்திலே நற்பழக்கங்கள் பழகாவிட்டால் பிற்பாடு இவர்கள் கடவுளுக்கும் தேசத்திற்கும் உகந்தவர்களாகவும் தங்கள் அயலாருக்கு ஆப்த நண்பர்களாகவும், தேசத்திற்குச் சிறந்த மாணிக்கமாகவும், சத் திய வேதத்திற்கோர் சாட்சியாகவும், முத்தியாம் மோக்ஷ பாக்கி யம் பெறவும், தக்கவராவரோ என்பது சந்தேகம். ஆகவே "இளமையிற்கல்" என்றவாறு சிறுவர் சிறுமிகளிடத்தில் பின் வரும் பத்து நற்பழக்கவழக்கங்களை விவேக விமரிசையுடன் பயிற் சிப்பது ஆசிரியர்பால் சுமந்த கடன்.

1. தீவிரமாகக் காரியங்களைச் செய்தல்—(Promptness)

சிறுபத்திலேயே இவ்வூக்கத்தையும், உற்சாகத்தையும் கைக் கொள்ளாவிட்டால் முதிர்ந்த பிராயத்தில் மந்த குணத்தை மேற் கொள்ளுவது அசாத்தியம். தக்க நேரத்தில் பள்ளிக்கு வரும் சிறுவர்களுக்குச் சன்மானமளிப்பது இக்குணத்தைப் பயிற்சிக்க சிறந்த சாதனம். மேலும் குறிக்கப்பட்ட நேரத்தில் உற்சாகத் துடனும் ஊக்கத்துடனும் தாமதமின்றி வேலையைத் துவக்கும் பிள்ளைகளைப் புகழ்தலும், இவ்விதம் செய்ய வற்புறுத்துதலும் நன்று. விளையாட்டு முடிந்தபோதிலும் இன்னம் விளையாடிக் கொண்டே இருக்கும் வழக்கத்தையும் மணியடித்தவுடன் வாராமல் தாமதித்து வரும் பழக்கத்தையும் தவிர்த்துவிடவேண்டும்.

2. முறையான குணம்—(Orderliness)

அலங்கோலையானது வகுப்பிலும் வீட்டிலும் பெருந் தொந் தரவை உண்டுபண்ணக்கூடிய காரியம். ஒவ்வொரு பொருளையும்

குறிக்கப்பட்ட இடத்தில் வைக்கவும், எடுக்கவும் பழக்கவேண்டும். வகுப்பில் எல்லாம் ஒழுங்காகவும் கிரமமாகவும் இருப்பதன்னியில் அங்கங்கே விழுந்து கிடக்கும் துண்டுக் காகிதங்கள், தூசி, துரும்பு முதலியவைகளை நீக்கிவிட பிள்ளைகளைப் பழக்கவேண்டும்.

3. அமரிக்கை—(Quietness)

பிள்ளைகள் பொதுவாகச் சப்தம் செய்யும் சார்புள்ளவர்கள். விளையாடும்போது இவ்விதம் செய்வதில் பாதகமில்லை. எனினும் வகுப்பிலும் விளையாட்டு நேரத்திலும் தங்கள் சப்தத்தைத் தணிக்கப் பழக்கவேண்டும். உபாத்தியாயர் வகுப்பில் மெதுவாகப் பேசி இவ்விதம் பிள்ளைகளும் பேசும்படி செய்வது நல்லது. ஒவ்வொரு நாளும் வகுப்பில் ஐந்து நிமிஷங்கள் மௌனமாக இருக்கப் பழக்குதல் மிகவும் சிறந்தது. ஏனெனில் மௌனமே ஞானத்தின் அடையாளம் என்பது பெரியோர் வாக்கு.

4. சுத்தம்—(Cleanliness)

இதற்கு உபாத்தியாயரின் நன்மாதிரிகையைவிடச் சிறந்தது வேறொன்றுமில்லை. சுத்தமான உடை உடுத்தித் தலை மயிரைத் தக்கவிதம் சீர்ப்படுத்தி எப்போதும் சுத்தமாய் இருக்கும் உத்தம வழக்கங்களை உடைத்தாய் இருத்தலே உபாத்தியாயர் செய்ய வேண்டியது. பிள்ளைகளையும் இவ்விதம் இருக்கத் தூண்டவேண்டியது. அசுத்தமான பிள்ளைகளை வகுப்பில் சேர்க்குமுன் திரேகத்தைச் சுத்தம் செய்யச் சொல்லவேண்டும் சுத்தமே சௌக்கியத்தின் அறிகுறி. ஆகையால் ஆசிரியர் இதைப்பற்றி அடிக்கடி வகுப்பில் பேசுவதன்னியில் கதைகளாலும் பாட்டுக்களாலும் இவ்விஷயத்தை வற்புறுத்தல் வேண்டும். அசுத்தப் பிள்ளைகளுக்கு யாதொரு சுதந்தரமும் கொடுக்கக்கூடாது. ஆகவே எல்லோரும் சுத்தமாக இருக்கத் தூண்டுவதுமல்லாமல் சாப்பிடப் போகுமுன் கைகளைச் சுத்தம் செய்யும் பழக்கத்தையும் ஊட்டவேண்டும். இதில் சாமர்த்தியமாக நடந்துகொள்ளவும் வேண்டும். வகுப்புகளிலும்; விராண்டாக்களிலும், வகுப்பைச் சுற்றியும் காகிதங்களைக் கிழித்துப்போடல், எச்சி உமிழ்தல், சுவர்களில் எழுதுதல்

முதலிய அனுசாரமான காரியங்களைத் தவிர்க்கவேண்டும். கிராமாந்தரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் இவ்விஷயத்தை வற்புறுத்தல் வேண்டும். ஏனெனில் அங்கே தாய் தந்தையர் இவ்வித காரியங்களைக் கவனிப்பதில்லை.

5. உண்மை பேசல்—(Truthfulness)

இதற்கு உபாத்தியாயரே போதிய மாதிரிகை காட்டவேண்டும். பிள்ளைகளோடு பழகும்போது இவ்வித குணம் தம்மிடம் இருப்பதாகக் காட்டத்தக்கவிதமாய் நடந்துகொள்ளவேண்டும். ஆசிரியர் வாக்குத் தவறுகிறவர் என்றும் உண்மை பேசுகிறதில்லை என்றும் பிள்ளைகள் அறிந்தால், அவர்மேல் தங்களுக்குள்ள மதிப்புப் போய் அவர் சொல்வதில் நம்பிக்கையும் வைக்கமாட்டார்கள். உண்மை பேசும் பிள்ளைகளுக்கு வெகுமதியளிப்பதும் பொய் பேசுபவர்களைத் துக்கமுகங் காட்டிக் கண்டிப்பதும் சிறந்த சாதனங்கள். உண்மை பேசுவதின் உயர்வை எடுத்துக்காட்டும் கதைகளைத் தக்க சமயத்தில் கையாடவேண்டும்.

6. தன்னலங்கருதாமை—(Unselfishness)

பொதுப்படப் பிள்ளைகள் தன்னலம் பாராட்டும் தன்மை வாய்ந்தவர்கள், சிறுபத்திலேயே பிறருக்குக் கொடுக்கும் பழக்கம் பண்ணுவிட்டால் பிற்காலத்திலே உலோபியாகவே இருப்பார்கள். பிறருக்கு ஈயும் குணத்தைச் சுவை பார்த்த பின்பு அதை விட்டுவிடுவது பிள்ளைகளுக்குக் கஷ்டம். ஆகவே ஆசிரியர் வெகு விமரிசையுடன், பிள்ளைகள் தாங்கள் மற்றவர்களால் என்ன பெறவேண்டி ஆசிக்கிறார்களோ அதையே அவ்விதமே மற்றவர்களுக்கும் கொடுக்கும்படி செய்யவேண்டும். இவ்விதம் தன்னலங்கருதாது பிறர்க்கென்றே வாழ்ந்த பெரியாரின் சரிதைகளைச் சொல்வதோடுகூட சமயாசமயம் இக்குணத்தைக் காட்டப் பிள்ளைகள் வலிய வரும்படி செய்யவேண்டும். அப்படியே எல்லோருக்கும் கொடுக்கப் போதுமான படமோ விளையாட்டுக் கருவிகளோ இல்லாத சமயத்தில் வலியத் தனக்கு வேண்டாமென்று சொல்லும்படி பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பழக்கவேண்டும். இவ்

வீரத்தனத்தைக் காட்டுஞ் சிறுவர்களுக்குத் தக்க வெகுமதி யளித்துப் புகழ்ந்து பேசுவது மிகவும் நல்லது. இக்குணம் இல்லாதவர்களிடமிருந்து எல்லாம் எடுத்துக்கொள்ளல் சில சமயம் வெகு பிரயோசனமாயும் நன்மையாயும் இருக்கும்.

7. பக்ஷம்—(Kindness)

தன்னோடு இருக்கும் பிள்ளைகளுக்குப் பக்ஷத்தையும், தனது பெரியோர்களோடு தக்க மேரை மரியாதையோடு, யோசித்துப் பேசிப் பழகும் குணத்தையும் உடைய சிறுவர்களே எல்லோருடையவும் நல்லெண்ணத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். இவ்விஷயத்தை ஆசிரியர் வற்புறுத்தல் வேண்டும். இதைக் கோறியே வாலிபச் சாரணர் இயக்கத்தில் ஒருநாளைக்கு ஒருவிசையாவது பிறருக்குப் பக்ஷம் காண்பிக்கவேண்டுமென்று ஒழுங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறுவர்கள் பொதுப்பட ஜீவப்பிராணிகளை உபாதை செய்யும் இயல்பினர். ஏனெனில் அவைகள் உணர்வதில்லை என்றே எண்ணுகிறார்கள். இதைத் தவிர்க்கவேண்டும். கோழிக் குஞ்சுகளையும் நாய்க்குட்டிகளையும் குரூரமாய் நடத்தாதபடி தடுக்கவேண்டும். உபாத்தியாயர் தம் மாதிரிகையால் ஜீவப்பிராணிகளின்மீது தாம் பரிதாபப்படுவதாகக் காட்டவேண்டும். ஜீவகாருண்யத்தைத் துலக்கிக் காட்டும் பல சரிதைகளைத் தக்க சமயத்திற் கையாடவேண்டும்.

8. தைரியம்—(Bravery)

வீரச் செயல்களை எடுத்துக் காட்டும் விநோதக் கதைகளைக் கேட்பதற்குப் பிள்ளைகள் வெகு பிரியப்படுவார்கள். இக்கதைகளைத் தக்கவிதமாகச் சொல்லி பிள்ளைகளுக்குத் தைரியமூட்டவேண்டும். எல்லோருக்குமுன் ஒரு பாட்டை அல்லது செய்யுளைச் சப்தமாய்ச் சொல்லச் செய்தல் அல்லது பாடச் செய்தல், கசப்பான மருந்து சாப்பிடும்போது சப்தம் செய்யாமலிருக்கச் செய்தல், காயங்கள், புண்கள் முதலியவைகளால் உண்டாகும் வேதனைகளை பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளச் செய்தல் ஆகிய இவைகளால் மனத்தைரியத்தைப் பயிற்றிக்கவேண்டும். தங்

182290.

களுக்குக் கீழ்ப்பட்டவர்களைத் துன்புறுத்தல் மிகவும் கோழைத் தனமென்பதை வற்புறுத்தல் வேண்டும். தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளல், மற்றவர்கள் கீழ்ப்படியாதபோது தான் கீழ்ப்படிதல் முதலியவைகள் மெய்யான வீரத்தனமான காரியங்கள் என்று சொல்லவேண்டும். இக்காரியங்களில் பழக்கவும்வேண்டும். கதைகள் சம்பாஷணைகள் முதலியவைகளால் மெய்யான வீரத்தனமென்னவென்பதை விளக்கிக் காட்டவேண்டும்.

9. கீழ்ப்படிதல்—(Obedience)

கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளாத ஆசிரியருக்கு மற்றவர்களும் கீழ்ப்படியமாட்டார்கள் என்பது பெரியோர் வாக்கியம். ஆகவே உபாத்தியாயரே தம் மாதிரிகையால் மற்றவர்களைக் கீழ்ப்படியப் பண்ணவேண்டும். எப்படியெனில்: ஒருபோதும் வாக்கைத் தவறக்கூடாது. ஒருபோதும் பாரபக்ஷம் பார்க்கக்கூடாது.

10. மரியாதை—(Courtesy)

சாதாரணமாக ஆசிரியரும், பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் வெகு சீக்கிரத்தில் மேரை மரியாதையைக் கற்றுக்கொள்ளக்கூடுமென்பதை உணர்வதில்லை. "நன்றியறிந்திருக்கிறேன்" "தயவு செய்து" முதலிய பதங்களைத் தக்க சமயத்தில் உபயோகிக்கக் கற்றுக்கொடுக்கவேண்டும். சிறுவர்கள் இவைகளை வேடிக்கை விளையாட்டுக்காகத் துவக்கத்தில் சொன்னாலும் நாளடைவில் இவைகள் நற்பழக்கங்களாக மாறிவிடும். மேற்கூறிய வார்த்தைகளைச் சொல்ல, சிலர் வெட்கப்படுவார்கள் அல்லது அவை அவர்களுக்குத் தெரியவே தெரியாது. இதை ஆசிரியர் நன்கு கவனிக்கவேண்டும். என்ன சொல்லியும் பையன் கேட்காவிட்டால் அவன் அதைச் சொல்லுமட்டும் ஏதோ சில வஸ்துக்களைக் கொடாமலிருக்கிறது உசிதம். உபாத்தியாயர் வேறு மனிதர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது பிள்ளைகள் அதை உற்றுக் கேட்கவிடப்படாது. பேசிக்கொண்டிருக்கும் இருவர் மத்தியில் புகுதல் நல்லதல்ல. மெய்யான மேரை மரியாதை இருதயத்திலிருக்கவேண்டும். இருதய சம்பூரணத்தால் வாய் பேசுமாதலால்

இவை வார்த்தைகளாலும் கிரிகைகளாலும் வெளித் தோன்றல் வேண்டும். மற்றவர்களோடு மரியாதையாய் நடந்துகொள்ளும் விதத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

மேற்கூறிய பத்து நற்பழக்கங்களைச் சிறுவர்களிடத்திற் பயிற்றுவித்தல், ஆசிரியர்பால் சுமந்த கடன் என்பதை அறியாதவர் வெகு சிலரே. பசுமரத்தாணிபோலும் மெழுகிலிட்ட அச்சுபோலும் சிறுவர்கள் மனதில் எப்பழக்கங்களும் எளிதில் பதியுமாதலால் ஒழுக்கமே நோக்கமாகக்கொண்டு உழைத்துவரும் ஆசிரியராகிய நாமும் சிறுவர்களிடத்தில் இதற்குத் தக்க அஸ்திவாரமிட்டுவருவோமாகில் வெகு சீக்கிரம் நம் நாடாம் இந்தியாவும் அஞ்ஞான இருள் நீங்கி மெஞ்ஞான ஒளி பெற்றுச் சிறப்புற்று ஓங்குமென்பதில் ஐயமில்லை.

P. M. S.

கணக்கென்றல் ஏன் கஷ்டமாயிருக்கிறது?

சாதாரணமாய் மாணவர்களுக்குள் கணக்கைப்பற்றி ஓர் வித வெறுப்பும் பயமும் மலிந்துகிடக்கின்றது. காரணமென்னையோவெனின், அவரவர் கஷ்டத்துக்குத்தக்கபடி கணக்கு பலனளிப்பதாயில்லை, சில மாணவர் எவ்வளவுதான் பிரயாசையுடனுழைத்தும் அதற்கேற்ப வெற்றியடையாததிலிருந்து ஓர் அளவில் இது உண்மையெனச் சொல்லலாம்.

கணக்கு உண்மையிற் கஷ்டமான பாடமா? அது சரியான முறைப்படி போதிக்கப்படுகிறதா? குறை எங்கே இருக்கிறது? பாடசாலையிற் போதிக்கப்படும் மற்ற எல்லாப் பாடங்களிலும் கணக்குக் கஷ்டமான பாடந்தான் என்று உணரப்படுவதால், மாணவருக்குப் பிரியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடிய வழியில் கணக்கைப் போதித்து இயற்கையாகவுள்ள பயத்தைக் குறைக்கப் பார்க்கவேண்டியது ஒவ்வோர் ஆசிரியர்பாலும் சார்ந்த பெருங் கடமையாகும். மாணவரின் அவசியத்திற்குஞ் சக்திக்குந் தக்காப்போல் இப்பாடத்தைக் கற்பிக்கவேண்டும். பண்டைக்

காலத்தில் ஆசிரியர், பாடப்புத்தகமட்டுமே பிரதானமாய்க் கருதப்பட்டு மாணவருடைய லக்ஷியங்களெல்லாம் அலக்ஷியம் செய்யப்பட்டன. இக்காலத்தியக் கல்விமுறையில் மாணவரே முக்கிய மானவர்களெனக் கருதப்படுகின்றனர். இதுவரை ஆசிரியர்தான் கற்பவராயும் மாணவர்கள் செவிகொண்டு கேட்பவர்களாயுமிருந்தனர். இப்போது, மாணவர்கள் வேலைசெய்யவேண்டும். அப்போது, ஆசிரியர் மாணவருக்காய்க் கணக்குச் செய்துகொடுத்தார். ஆகையால் ஆசிரியர் தத்தம் வகுப்பு மாணவரின் மனோநிலையைத் தனித்தனியே அறிந்து அதற்கேற்பத்தம் போதனையைக் கையாள வேண்டும். உதாரணமாக: கீழ்வகுப்புகளில் உ. பொ. அ.; அ. பொ. ம.; சதுர அளவு, கன அளவு, என்பவற்றையே பேசாமல் சாதாரண உலக வழக்கில் அவற்றையொட்டிய சிறு சிறு கணக்குகளைப் போட்டாற் போதும். சிறு வயதில் காரணகாரியம் அறியுந்தன்மை குறைவானபடியால் அவர்கள் கணக்கைச் செய்யுந் திறமை கொண்டிருந்தாற் போதும். எப்படி என்கிறதைப்பற்றி சிறுவயதில் அவசியமில்லை. மேலும் திறமைசாலியான ஆசிரியர், சமபத்திற்கேற்ப கணக்கில் மேனோக்கத்தையும், அவசியத்தையும், பயனையும் அழகான முறையில் அடிக்கடி மாணவருக்கெடுத்தோதத் தயாராயிருக்கவேண்டும்.

ஆசிரியரிற் சிலர் தங்கள் முயற்சியெல்லாம் வியர்த்தமாய்ப் போகின்றனவே என்பதை மாணவர்மேற் சுமத்துகிறார்கள். மாணவர்க்குக் கிரகிக்குந்தன்மை போதாதென்றும் மனோசக்தி குறைவென்றுஞ் சொல்லித் தங்களைச் சாமாதானஞ் செய்துகொள்கின்றனர். அது சுத்தத் தப்பென்று எல்லோரும் ஒப்புவர். விஷயத்தைப் போதிக்கும் முறை தவறானதாயிருப்பின்தான் அவர்கள் அவ்விதஞ் சொல்லக்கூடும். சரியான முறைப்படி போதிக்கும் எவரும் அதற்கு உடன்படார். கணக்கென்பது எண்களால் ஆன ஓர் தனிப்பாடமாயில்லாமல் பாடசாலையிற் போதிக்கப்படும் மற்ற எல்லாப்பாடங்களுடனுஞ் சம்பந்தப்பட்டதாயிருக்கவேண்டுமென்பது தற்கால முறை. அப்போதுதான் கணக்கின் பயன் மாணவர் மனதிற் பதிகின்றது. அநேகமாய் ஆசிரியர் துரைத்தனத்தார் அங்கீகாரம்பெற்ற ஏதோவோர் கணக்குப் புத்தகத்

தைக் கைக்கொண்டு அதையே, அதிலுள்ளபடியே போதித்துவருகின்றனர். இது ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவுமா வென்றபாடாய்த்தான் முடிகிறது.

பாரபட்சமின்றி, ஓரவஞ்சனையின்றி, மேற்கூறிய நியாயங்களைச் சீர்தூக்கிப்பார்ப்பின் குறையெல்லாம் ஆசிரியர் தோட்களில்தான் விழக் காரணமிருக்கிறது. எனவே, மாணவரின் அவசியத்துக்கும் சக்திக்குமேற்றாப்போல் இனிமையாயும் சுலபமாயுமிருக்குவண்ணம் போதிக்க ஆசிரியர் முற்படவேண்டும். "மெய்யுடையொருவன் சொலமாட்டாமைபாற் பொய்போலும்மே பொய்போலும்மே" என்றார். ஆகவே போதிக்கும் விஷயத்தைத் தன்னதாக்கிக்கொண்டு உற்சாகத்துடன் போதிக்கவேண்டும். சரித்திர பாடத்தில் வருஷங்களையும் யுத்தங்களையுமே பிரதானமாகக் கருதின் அதன் சுவை குன்றிப்போகின்றது. மகா ஆச்சரியத்தையும் பிரியத்தையுமே கொடுக்கும் இயற்கைப்பாடம், பூகோள முதலியன தகுந்த உதாகரணங்களின்றி வகுப்பிற்குள்ளேயே போதிக்கப்படுவதால் அதிலும் ஓர்வித பிரியமும் ஏற்படுவதில்லை. எனவே விஷயமும் முறையும் மாணவருக்கு உற்சாகத்தை, பிரியத்தை வளர்க்கக்கூடியதாயிருக்கவேண்டும். (தொடரும்)

P. A. A.

கல்விப் பொருள் செல்வப் பொருள்

கடவுள் வணக்கம்

பரந்திடம் பால்ஐம்பூதம் பாரிருசுடரா யெங்கும்
சுரந்தருள் கரந்து காப்போய் சுவைக்கனி யமுதிற்றெண்டர்
சிரந்தொழுங் கடவுள்நின்னைச் சிந்தைசொற் செயலில் வைத்து
நிரந்தர மக்களுய்வோம் நிறைமொழி மறைமுன் சாற்றே

இப்பூவுலகின்கண் மானிடராய்ப் பிறந்த ஆண், பெண் என்ற இருவகுப்பினரில் ஒவ்வொருவருக்கும் கருணை நிதியான ஈசுவரனால் அளிக்கப்பட்ட கண்கள் மூன்றே. அவைகளில் அகக்கண் ஒன்று; புறக்கண் இரண்டு. அவ்வகக்கண்ணே ஞானக்கண் என்று சொல்லப்படும். சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று

தத்துவங்களில் சித்து என்னும் ஆத்மாவே அவ் ஞானக் கண்ணுகும். அந்த ஞானக் கண்ணுகிய தகளியில், அன்பாகிய நெய்யைப் பெய்து, அருளாகிய திரியைவிட்டு, அறிவாகிய விளக்கை ஏற்றினுல், கல்விப் பெண், செல்வப் பெண் என்ற இவ்விரு வனிதைகளில் யார் சிறந்தவளென்று குன்றின்மேலிட்ட தீபம் போல் நன்கு விளங்கும்.

இதுபற்றியே:

முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்

என்றும் சொல்லப்படுகின்றது.

அவ்விதம் அகத்துக் கண்கொண்டு பார்க்கும்பொழுது, உலகத்தில், அருமையும், பெருமையுமானதாய், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பயனையும் அடைதற்குரிய மக்கட் பிறப்பிற் பிறந்தவர்களாகிய நாம், மிருகம், பறவை, தாவரம் முதலிய உயிருள்ளவைகளும்; கல், மண் முதலிய உயிரில்லாதவைகளுமாகிய அஃறிணையைப்போல் உண்டு உறங்காமல், அயர்ச்சியின்றி முயற்சியுற்றவராய், தூக்கமின்றி ஊக்கம் நிறைந்தவராய், பிரதானமாகிய கல்விப் பொருள் செல்வப் பொருள் இரண்டினும்,

கல்வி:

அறம் பொருள் இன்பமும் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை

என்றபடி முதலில் கல்விப் பொருளையும், அதன்பின் அதற்குச் சாதகமாயுள்ள செல்வப் பொருளையும் தகுந்த அளவில், தகுந்த விதமாய்த் தேடவேண்டும்.

இதுநிற்க, கல்விப் பொருள் செல்வப் பொருளினும் எவ்விதம் சிறந்ததெனச் சிறிது ஆராய்வோம்.

அவ்விதம் ஆராயுமிடத்து, கல்விப்பொருள்:

வெள்ளத்தாற் போகாது, வெந்தழலால் வேகாது,
[வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும்
[நிறையொழியக் குறைபடாது,

கள்ளர்க்கோ மிக அரிது, காவலோ மிக எளிது,
[கல்வியென்னும்
உள்ளப் பொருள் உள்ளிருக்க உலகெலாம் பொருள் தேடி
[உழல்வதேனே

என்றாற்போல், கல்விப் பொருளாவது செல்வப் பொருளைப்போல வெள்ளங்கொண்டு போகாததும், நெருப்பிலே வேகாததும், கள்வர் அபகரிக்காததும், காவல் செய்ய வேண்டாததும், அரசர்களால் வவ்வப்படாததும், தாயத்தாரால் பங்கிட்டுக் கொள்ள முடியாததும், விரும்பினவர்கட்கெல்லாம் தடையின்றி வழங்கினாலும் மென்மேலும் வளர்வதன்றிக் குறைபடாததுமாய், அஞ்ஞானமாகிய பிணிக்கு மருந்துமாயிருப்பதால் இதனை செல்வப் பொருளினும் சிறந்ததாகக் கொள்ளவேண்டும்.

இதுவுமன்றி:

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்;
எச்சமென ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற

என்பதேபோல் இப்பொருளை வைத்த இடமும் பழுதுபடாது. "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்றபடி, தக்கவரறிந்து தானமாகக் கொடுத்தாலும் கேடுறாது. சீர் சிறப்பு வாய்ந்த மன்னன் கோபித்தாலும் நம்மிடமிருந்து அபகரித்துக்கொள்ளமுடியாது. ஆதலின் ஓர் தந்தை தன் தநயனுக்குத் தன் ஜீவிய காலத்தின் எஞ்சிய பொருளென சேர்த்துவைக்கவேண்டிய பொருள் வித்தையாகிய இக்கல்விப் பொருளேயன்றி வேறு பொருளல்ல என்பது பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாய்த் தெரிகின்றது.

இப்பொருள் நம்மிடம் என்ன செய்கின்றதெனப் பார்த்தால்:

இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்;
தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;
எம்மை உலகத்தும் யாம் காணேம், கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து

என்ற செய்யுளின்படி இப்பொருள், இப்பிறப்பின் பயனை இவ்வுலகத்திலேதானே நமக்கு அடைந்து கொடுக்கிறதுமன்றிக் கொடுக்கக் கொடுக்கக் குறையாததுமாய், தம்மையுடையாரைக் கௌரவப்படுத்துவதுமாய், தாமிருக்க அவருக்குக் கேடுவர வொட்டா

ததுமாய், எவ்வுலகத்தும் இப்பொருட்கு மேம்பட்டதென்று காணுததுமாய், பேதமையாகிய பிறவி நோயைத் தீர்க்கக்கூடிய ஓர் சிறந்த அவிழ்தமுமாயிருப்பதால் இவ்விசேஷித்த பொருளை "இளமையிற் கல்" என்று ஔவை சொன்னவண்ணம், இளமைப் பருவத்திற்றுனே உறுதியாக அவசியம் தேடவேண்டும்.

தேடுங்கால் :

கல்வி கரையில ; கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைக்கின் பிணிபல : தெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து

என்னும் பாண்டிய நாட்டு அரசனுன உக்கிரப் பெருவழுதி ஆதரித்துவந்த ஓர் கூட்டத்தினராகிய சமணமுனிவரால் பாடப்பட்ட நாலடியார் என்னும் நூலிற் கண்டுள்ள இச் செய்யுளின் படி, ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் என்ற முந்நீரையும் தன்னிடத்தே கொண்டுள்ள பிரமாண்டமான சமுத்திரத்திற்குக்கூட கரைகள் உண்டு. ஆனுல் இக்கல்விக்கோ அவ்வித கரைகள் இல்லை. இவ்விதம் வறையறைப்படாத இச்கல்வியைக் கற்பதற்கோ, ஆயுள் நீடித்திராமையாலும் கற்பவர் சரீரமோ பிணிக்கெல்லாம் பிறப்பிடமாகையாலும், அதைரியமுற்று அஃது முடியாமையால் கைவிட்டுவிடாமலும்; அல்லது "கண்டது கற்கப் பண்டிதனுவான்" என்பதோர் சாமானிய வாசகத்தை நம்பி கண்டதெல்லாமாகிய மூடர்களுக்கேற்ற தந்தனப் பாட்டும், ரஞ்சனக் கூத்தும் உள்ளிட்ட புன்கல்வி கற்றுப் பொழுதுபோக்காமல், நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னப்பறவைபோலச் சாஸ்திரங்களில் விசேஷ சாமானியங்களை யூகித்துச் சாராமிசந் தெரிந்து கற்றல்வேண்டும்.

இதை வலியுறுத்த :

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக

என்ற திருவள்ளுவ நாயனுர் அருளிச்செய்த திருக்குறளே போதிய சான்றுகும்.

அப்படிப் பலகாலும் ஐயந்திரிபற அமையக் கற்ற கல்வியை "அதைத்தான் சொல்வானேன் வாய்தான் நோவானேன்". என்று கெட்டொழிந்த சோம்பரைப்போல் சோம்பியிராமல் "கேள்வி முயல்" என்றமையால் கற்றுத்தேர்ந்த பெரியாரைத்

தேடிச்சென்று, பற்பல நற்கேள்விகளைக் கேட்டும், அதன்பின் கற்றதும், கேட்டதுமாகியவற்றைத் தீர ஆராய்ந்து பார்த்துக் குப்பையைச் சீத்து விலையுயர்ந்த மாணிக்கத்தை ஆராய்ந்தெடுப்பதுபோல் உண்மை தெளிந்து, விலக்கத்தக்கவைகளை விலக்கிக் கொள்ளத்தக்கவைகளைக்கொண்டு அனுஷ்டித்தல்வேண்டும்.

இஃது இவ்வாறு இருக்க, வாசகர்களில் சிலர், "தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்று நினைத்து, செல்வப் பொருளின்றிக் கல்விப்பொருளை அடைவதெங்ஙனமென்றும், பண்டைக் காலத்தில் கல்விப் பொருளுடைய புலவர்களில் ஔவை, கம்பர்போன்ற சிலர் வயற்றுக் கஞ்சிக்குக்கூடக் காற்றுய்ப் பறந்தனரேயென்றும் இதுபோன்ற சில கேள்விகளைப் பிறப்பிக்கக்கூடும். அன்னவர்க்கு நான் சொல்லிக்கொள்வது யாதெனில்: செல்வப் பொருளும் நமக்கு அவசியமேயாயினும் அஃது கல்விக்கு இரண்டாவதென்றும், அக் கல்வியே பின் நமக்கு பொருட் செல்வத்தை ஈட்டிக் கொடுக்குமென்றும், செல்வப் பொருளை மிகுதியுடைய அரசனும் கல்விப் பொருளுடைய புலவனோடு ஒப்பிடும்பொழுது சிறியவன் என்பதைக் காட்ட:

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்
மன்னற்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

என்ற அரும் பெரும் செய்யுளே தக்க ஆதாரமாகும்.

இறுதியாக:

பூவினுட் புதைந்த பொருள்களும் புலவர்
புகன்ற நூன் மொழிகளும் மதமும்
காவியக் கதைகள் புராணங்கள் பலவும்
கல்வியிற் பெரியவர் கண்டாய்ந்தார்
நாவினுக்கினிய மொழிகளிற் கல்வி
செல்வப் பொருட்களை விழைந்தேன்
பாவியென்புன்சொற் பாகுதேன் மழலைப்
பயனது பல்கலையவர்க்கே—

என்றபடி, கல்வி கேள்விகளில் தேர்ச்சியுற்ற பெரியோர், பூமியில் அங்கங்கே புதைந்துகிடந்த பொருட்களைக்கொண்டும்; தெய்வ கடாக்ஷம் பெற்ற பல புலவர்கள் பாடித்தந்த காவியம், புராணம்,

இதிகாசம் முதலான நூல்களைக்கொண்டும் இக்கல்விப் பொருளைக் கண்டு ஆராய்ச்சி செய்து கற்றனர். ஆனால் பாவியாகிய யானோ என் புல்லறிவுகொண்டு, அங்கங்கே கிடைக்கப்பெற்ற சில புத்தகங்களிலிருந்து தேர்ந்தெடுத்து இவ்வியாசத்தை என் எளிய மொழிகளில் கூறியுள்ளேன். இஃது இதை வாசிக்கும் பலவித கலைக்கியானங்களைக் கற்ற வாசகர்கட்கு ஒரு சிறிது பயன்படுமாறு அருளும்படி எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளை இறைஞ்சி இத்துடன் என் வியாசத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

S. Sathiavasagam Pillai,
Higher Junior.

நன்று—தீது

அன்று முதிர்வது என்ன நின்று முதிர்வது என்ன வென்று கிரேக்க சாஸ்திரியான அரிஸ்டாட்டலைக் கேட்க, அவர்: அன்று முதிர்வது நன்று, நின்று முதிர்வது தீது என்று உத்தாரமளித்தாராம். ஒருவன் செய்யும் நன்றியைத் தான் அப்பொழுதே மறப்பதும் தீமையை மாத்திரம் வெகுநாள் வரையில் கனவிலும் மறவாமல் ஞாபகத்தில் இருத்துவதும் மனுஷர் இயற்கையென்று அந்த ஞானசிகாமணி அனுபவத்தால் அறிந்திருந்தான். மனுஷரில் வெகுபேர் பிறர் செய்யும் நன்றியைக் குருமணலில் எழுதுவார்கள். காற்று அடித்து அம்மணலைத் தூற்றவும் அவ்வெழுத்து சிறிது நேரத்தில் அழிந்துபோகும். பிறர் செய்யும் தீமையையோ வச்சிர ஏட்டில் தீட்டுவார்கள். கற்பகோடி காலஞ்சென்றாலும் அவ்வெழுத்து அணுவளவேனும் அழியாது நிற்கும், ஆனால்:—

பெருந்தன்மையுடையவர்கள், புத்திமான்கள் தாங்கள் பெற்ற நன்றியை ஒருக்காலும் மறவாது தக்ககாலத்தில் பிரதி நன்றி செய்யக் காத்திருப்பார்கள். சிறியோர், புத்தியில்லாதவர்கள் நன்றியற்றவர்களாயிருப்பார்கள். தாங்கள் பெற்ற தீதை முழுதும் மறந்து அதற்குப் பிரதியுபகாரமாக நன்றியையே செய்துவருபவர்கள் பெருந்தன்மையுடைய மகா புண்ணியவாளர்களாமே.

அலெக்சாந்திரியா பட்டிணத்து பிதாப்பிதாவான அர்ச். அருளப்பர் தம்முடைய தங்கை மகனை வளர்த்துப் போஷித்து வந்தார். அச்சிறுவனை ஓர்நாள் அப்பட்டணத்துக் கடைக்கார

ஞெருவன் யாதோர் காரணமுமில்லாமல் திட்டி அவமானப்படுத்தி யனுப்பச் சிறுவன் மிகவும் வருத்தத்தோடு அழுதுகொண்டு ஓடி வந்து கடைக்காரனைத் தண்டிக்கவேண்டுமென்பதாக மனு செய்து கொண்டான். அர்ச்சியசிஷ்டவர் சிறுவனுடைய கோபத்தைக் கண்டு இச்சமயத்தில் புத்தி சொன்னால் அப்பிரயோசனமென்று கண்டு, மகனே பயப்படாதே உன்னை அவமானம் செய்தவனைத் தண்டிப்போமென்றார். மூன்று நாள் கடந்தபின் சிறுவனைத் தம்மிடம் கூப்பிட்டு, நீ நம்முடைய குமாரனென்ற பேர் வகித்திருக்க இஷ்டமானால் கடைக்காரன் தப்பிதத்தை முழுதும் பொறுத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் மகனே இன்று காலை நீ ஜெபம் செய்தபோது எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல், எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும் என்று வேண்டிக்கொண்டாயல்லோ! ஆண்டவரிடம் இன்று உன் சத்துராதியை நீ பொறுத்துக்கொண்டவிதமே உனக்குப் பொறுத்தல் தர வேண்டிக்கொள்ளவில்லையோ? வென்க, ஆம் சுவாமி அப்படியே பொறுத்தேன் என்றான்; உடனே மேற்றிராசனத்திற்குச் செலுத்தவேண்டிய வரியை மன்னித்ததாக ஓர் சீட்டு கடைக்காரனுக்கு எழுதியனுப்பினார். பட்டணத்து ஜனங்கள் எல்லோரும் அவருடைய நடத்தையை வியந்து கொண்டாடினார்கள். தப்பிதம் செய்த கடைக்காரன் தன்னைத் தண்டிக்காமல் பேருபகாரம் செய்து பொறுத்ததற்காக உடனே ஓடிவந்து அவருடைய பாதாரவிந்தத்தில் வீழ்ந்து சரணடைந்தான்.

அதுபோல நாமும் நமது சத்துருக்களைப் பொறுத்து உபகாரம் செய்துவருவோமாக.

ஆ. அந்தோனிசாமி பிள்ளை,
மாதாக்கோட்டை.

யோசனைக் கணக்கு

ஒரு குடியானவனிடத்தில் $\frac{1}{4}$ படி பால் கரக்கும் பசுக்கள் 10, $\frac{3}{4}$ படி பால் கரக்கும் பசுக்கள் 10, 2 படி பால் கரக்கும் பசுக்கள் 10 இருந்தது. அவன் தன் 3 குமாரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10 மாடும் 10 படி பாலும் சரியாக கிடைக்கும்படி எவ்விதம் பிரித்துக் கொடுத்திருப்பான்.

R. மீக்கேல் தேவர்.

(யோசனுவிர்த்தி விருத்தம்)

(விடையில்; "கதாநாயகன் பெயரும்; அவனைத் துன்புறுத்தியவர் பெயர்களும்; துன்புறுத்திய இடங்களும் தெளிவாக; விருத்தத்தில் இருத்தல்வேண்டும்.)

பேதளித்த "பாவி" யென்னை ஐவர் கூடி
பெரும் பாடால் பெரியதொரு குகையில் தள்ள,
பேரிறைச்சலால் வாசல் மூடியங்கு
பின்விடா மழைநீரில் நனைத்து வாட்ட,
வாதத்தால் என்னுன்கு பேரடித் துதைத் திழுக்க
வந்தவழி விலகிசிறு பாதைகண்டு
வர; பரந்த யிடங்கண்டு தங்க, எரி
மலையினு— புகையுந் தீக்குழம்புங் கொட்ட,
நீதமின்றி எலும்பிருக்கப் பறித்த பின்னே
நிமிஷத்தில் சிறுகடவுக் குள்நுழைந்து,
நீரென்று கைப்பை யருந்திடவோர் பலனின்றி,
நிக்ஷயமாய் உயிர்பிடுங்குந் தருணந் தன்னில்,
சூதில்லா தென்னைப் பல கால்வாய் நீரில்
சுழற்றியே யமிழ்த்திச் சில தடவையாக
சூழ்ச்சியாய் உதிரமும் மூளை நரம்பும்
சுருக்குடன் உறிஞ்சிக் குற்றுயிர தாக்க
தட்டுத் தடுமாறித் தனியே ஓர் பாதையில்
தந்திர மென்றோடிய செல்லுங் காலில்
தத்தியே ஈரைந்து காத தூரம்
தாண்டியபின் ஞவலாய்ப் பிழைக்க யெண்ணி
விட்டது சனியனென் றிருந்திடும் போழ்தினில,
விரோதிக ளெந்தனை மறித்துக்கொண்டு
வீருடன் போருக்கு வாருமென்றோத நான்
வெகு சமர்புரிந்துமே விரட்ட, அந்த

முட்டாட்களென்னை வெல்லமுடியாதென
மூர்க்கமாய் விஷநீரை ஊற்றிச் செல்ல
மூச்சுத் திணறி திக்கு முக்காடி
முன்பின் ஞாலோசனை முழுதும் மாறி
பட்ட துன்பமெலாம் போதுமே நமோநம
பாவியிற் "பாவி" ஞனென்று விம்மி
பற்றுள்ள யென்தலை தப்பியது தம்பிரான்
பாக்கியமென்றே வீழ்ந்து கிடந்தேன் மண்ணில்.

T. S. S. ஆரோக்கியஸாமி டீச்சர்,
உளுந்தங்குடி,
லால்குடி; திருச்சி.

திருக்குடும்ப வாழ்த்து

"கருவினுருவாகி வந்து" என்ற சந்தம்.

1. சேசுமரி சூசையெனுந் திருக்குடும்பமே யுமது
சேவடியை ஆவலுடன் பணிந்தோமே
திரித்துவத்தின் சாயலாக ஜெகதலத்திலே சிறந்து
தேவவரமே நிறைந்த புண்யரே (சேசு)

2. நித்திய தேவபிதாவும் அத்தியந்த அன்புடனே
நேசித்த பரகதியோர் பொக்ஷமே
நிந்தனை கஸ்தி துன்பங்கள் எந்தவிதமாய் வரினும்
சந்தோஷமுடன் பொறுத்த தவத்தோரே (சேசு)

3. புண்ணியக்கண்ணாடியெனும் நன்னய வழிகாட்டியே
புத்திரரிருதயத்தின் நேசமே
பூவறுமை நன்மையையும் தேவுலக நன்மையையும்
பூரணமாய்க் கொண்டிருந்த பாக்யரே (சேசு)

4. துன்பமடைந்தழுபவர்க்கு இன்பமுள்ள ஆறுதலே
துதிப்பவர்க்கு நம்பிக்கையாயிருப்போரே
தொல்லுலகக் கிறீஸ்துவர்கள் எல்லாக் குடும்பங்கட்கும்
சுகிர்த மாதிரிகையான பெரியாரே— (சேசு)

5. உத்தம படிப்பினையை நித்தமுங் கைக்கொண்டடியோர்
பக்தர்களாக வரத்தைத் தருவீரே
உன்னத பரகதியின் ஒய்விலாப் பேரின்பமதை
உங்களோடனுபவிக்கச் செய்வீரே— (சேசு)

மாணுமதுரை சூ. ஆ.

யோசனைக் கணக்குக்கு விடை

(கொத்து 22, மலர் 9, பக்கம் 144 பார்க்க)

இடைச்சி கொண்டுபோன பால் 500 சேர். முதல் சினேகிதி 80 சேர் எடுத்துக்கொண்ட பிறகு மீதியிருப்பது 420 சேர் சுய பாலும் 80 சேர் தண்ணீரும். இரண்டாவது சினேகிதி எடுத்துக் கொண்ட சுய பால் $\frac{100}{500} \times 420 = 84$ சேர். அதில் கலந்துள்ள தண்ணீர் 16 சேர். அவள் எடுத்துக்கொண்டபிறகு மீதியிருக்கும் சுய பால் 336 சேர். அதில் கலந்துள்ள தண்ணீர் 164 சேர். மூன்றாவது சினேகிதி எடுத்துக்கொண்ட சுய பால் $\frac{120}{500} \times 336 = \frac{2016}{25} = 80\frac{16}{25}$ சேர். ஆகையினால் அரண்மனை போய்ச் சேர்ந்த சுத்தமான பால் $336 - 80\frac{16}{25} = 255\frac{9}{25}$ or 255·36 சேர்.

M. Gnanapragasam,
Sec. Grade Junior.

இதே விடை R. மிக்கேல் தேவர் அனுப்பியிருக்கிறார்.

I. நற்புத்தி

1. உன்னைப்போல் பிறரையும் நேசி—தினம்
பொன்னே மதியுள்ள நூல்களை வாசி

2. பூச்சியைப் பிடித்துக் கொல்லாதே—உன்றன்
ஆச்சி சொன்னாலும் நீ அபத்தம் சொல்லாதே

3. பிக்ஷை யிடாம லுண்ணாதே—மிருகம்
பக்ஷிக்குமே துன்பம் பண்ண வொண்ணாதே

4. இஷ்டமாய் நல்லோரைக் கூடு—பொல்லாத்
துஷ்டரைக் கண்டால் நீ தூரத்திலோடு

5. வேலை செய்வோரை வாட்டாதே—தினம்
ஆலைக் கரும்புபோல் அவரை யாட்டாதே

6. சற்றுங் கூலியைக் குறைக்காதே—செய்த
குற்றத்தைப் பொய்சொல்லி நீ மறைக்காதே

7. உன்னை நீ புகழ்ந்துகொள் ளாதே—பிறர்
நன்னயப் புகழ்ச்சியை நம்பித் துள்ளாதே

8. மெய் சொல்ல மேன்மையுண் டாமே—தினம்
பொய் சொல்லும் வாய்க்குப் புசிப்பற்றுப் போமே

9. கள்வர்கைப் பொருளைவாங் காதே—வாங்கும்
உளவரில்லாவிட்டால் களவேது மாதே.

II. விடுகதை

வட்ட மதிபோல் இருக்கும் வன்னிக் கொடிதாவும் கொட்டு வார் கையினின்று கூத்தாடும்—சுட்டால் அரகரா என்னுமே அம்பல சோமாசி ஒருநாள் விட்டேன் நீ உரை.

L. Savarimuthu,
Lower Junior.

இராஜ வாழ்த்து

"எங்கள் காவலாம்"—என்ற சந்தம்

பல்லவி

எங்களை யாளும் இறைவனைந்தாஞ் ஜார்ஜ்
எங்கள் ராணி மேரிமைந்தர் என்றும் வாழ்கவே.

அநுபல்லவி

தங்க பரனின் தங்க மலரைச்
சங்கையுடனே போற்றுவோம் (எங்.)

சரணங்கள்

1. ஆங்கில அரசாட்சி யோங்கிட
நீங்கிடாத வெற்றி கீர்த்தி நின்றுதேங்கிட
தீங்கில்லாது பிரஜைகள் தனைப்
பாங்குடன் பாதுகாத்திட— (எங்.)

2. தேவ ஆசியுஞ் சிறந்த நேசமும்
பூவுலகில் சத்யவாக்கும் பொறுமையும் அன்பும்
மேவிடும்படி யாவல்கொண்டு நாங்
கூவிமங்களம் பாடுவோம்— (எங்.)

சூ. ஆரோக்கியசாமி,
போர்டு பெண் பாடசாலை, மானாமதுரை.

JL
ணா41, N11 P
N82-22-6+1
... ஆய்வுக் காப்பக நூலகம்
182290
சென்னை-600 008

PERMISSU SUPERIORUM.
St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1932